மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

உதவித் தொகை

***20841—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமண உதவித் தொகை, மகப்பேறு நிதியுதவித் திட்டங்களில் பயன்பெற நகர்ப்புற ஆண்டு வருமான உச்சவரம்புத் தொகையை ரூ.30,000/– ஆக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமண உதவித் திட்டங்களின்கீழ் பயன்பெற ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.24,000/– ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார்கள். அதுபோல, மகப்பேறு உதவித் தொகை பெற வருமானச் சான்று தேவையில்லை என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலே எழுப்பிய கேள்வி இது. இப்போது மகப்பேறு உதவித் திட்டத்திற்கு வருமான வரம்பு தேவையில்லை என்று நீக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்வு. நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, திருமண உதவித் திட்டத்திற்கான உதவியும், மகப்பேறு நிதி உதவியும் உரிய காலத்தில் கிடைக்காத ஒரு குறை என்பது தொடர்ந்து நீடிக்கிறது. நான்

[2008 நவம்பர் 11

சமீபத்திலே திருப்பூர் தொகுதிக்குள் மக்களைச் சந்திக்கச் செல்கிறபோது, அதாவது கருவுற்றிருக்கக்கூடிய தாய்மார்களுக்கு அந்த மகப்பேறு உதவித் தொகை வழங்கப்படுகிற திட்டம், குழந்தை பிறந்து, 4, 5 மாதங்கள் கடந்த பிறகும்கூட அவர்களுக்குக் கிடைக்காத ஒரு நிலையை அங்கே நேரிலே வந்து ஒரு தாய் சொன்னதைக் கேள்விப்பட்டேன். ஆகவே, இதுமாதிரியான புகார்கள் ஆங்காங்கே வருகின்றன. அதற்கு அதிகாரிகளிடத்திலே தொடர்புகொண்டு கேட்டால், ஒரு தொகுதிக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, அதற்கு மேல் வருகிற விண்ணப்பங்களைக் காலத்திலே நிறைவு செய்ய முடியாத நிலை இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, எல்லாத் தொகுதிகளுக்கும் ஒரே அளவுகோல் இல்லாமல், மக்கள்தொகையினுடைய எண்ணிக்கைக்கேற்ப அந்த ஒதுக்கீடுகளை அதிகரிப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண உதவித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், உரிய நேரத்தில் வழங்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவரைக்கும் இந்த 6 மாதங்களில் ஒதுக்கப்பட்ட நிதியில் 81 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, மகப்பேறு உதவித் தொகையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டத்தின்போது, உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டுமென்று அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, கேரள மாநிலத்தின் எல்லையிலே இருக்கிறது. ஆகவே, அந்த எல்லையின் அருகில், தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளே வசிக்கக்கூடியவர்கள் நல்ல

2008 நவம்பர் 11]

சிகிச்சைக்காக, அதற்கு அருகிலே இருக்கின்ற கேரள எல்லைக்குள்ளே மருத்துவ சிகிச்சை செய்துகொள்வதற்கு அல்லது பிரசவத்திற்காக அங்கே தாய்மார்கள் செல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தப் பெண்களுக்கு, இரு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமும், அதுபோல, மகப்பேறு உதவித் திட்டமும், பக்கத்து மாநிலத்திலே அவர்கள் சிகிச்சை பெற்ற காரணத்தாலே அந்த உதவித் தொகைகள் வழங்குவது மறுக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு உதவிகளைச் செய்து வரக்கூடியவர், குறிப்பாகப் பெண்களுக்கு உதவி செய்து வரக்கூடியவர். ஆகவே, நம்முடைய தமிழ்நாட்டிற்குள்ளேயே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, பக்கத்திலே ஒரு நல்ல சிகிச்சை கிடைக்கிறது என்பதற்காக, 2 கிலோ மீட்டர் எல்லை தாண்டிச் சென்ற காரணத்தாலே அந்த உதவித் தொகைகள் கொடுப்பது மறுக்கப்படுகிறது. அந்த உதவித் தொகைகள் அந்தப் பெண்களுக்கும் கிடைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் அந்தமாதிரி ஒரு பிரச்சினை இருப்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதாவது, தமிழகத் திட்டத்தில் கேரள மாநில மக்கள் இங்கே பயன் அடைந்துவிடக்கூடாது என்பதற்காக, இருப்பிடச் சான்று சமர்ப்பிக்கும் உரிய தகுதியுள்ள தமிழகத் தாய்மார்கள், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக அரசு அலுவலர்களுக்கு, அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதுபோல, மகப்பேறு நிதி உதவித் தொகையை அளிப்பது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.